**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108517

1. District : மாவட்டம் Tiruppur PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 9/2020 [illegible] Date: நாள் 16.12.2020

2. (i) Act சட்டம்: Cr.P.C Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 15.12.2020 Date to : நாள் வரை 16.12.2020 02.00hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 20.45hrs Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.12.2020 Time : நேரம் 12.30hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-III Time : நேரம் 12.30hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக டைப் செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 5 km. தென்கிழக்கே
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி டாஸ்மாக் கடை எண். 4000(F-11) பார் பஜார் காம்ப்ளக்ஸ், வளர்மதி பஸ்நிலையம், திருப்பூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் U. ஜெயவேல் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் உச்சியப்பன்,
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 02.06.1968 (d) Nationality : நாட்டினம் இந்தி (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. திரு. M. பாபு, மேற்பார்வையாளர், டாஸ்மாக் கடை எண் 1965. [illegible] திருப்பூர்.
   2. Tr. S.R. மாணிக்கம் மேற்பார்வையாளர் டாஸ்மாக் கடை எண் 2300 [illegible]
   3. திரு. A. கோவிந்தன், உதவி விற்பனையாளர், டாஸ்மாக் கடை எண். 2302, [illegible], திருப்பூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கீழ்கண்ட தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 16/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 16/12/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

16.12.2020 – 14.15hrs.

Name: பெயர் R.. [illegible]
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
[illegible] மற்றும் [illegible]
திருப்பூர்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 9/2020/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 16.12.2020-ம் தேதி காலை 12.30 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தின் ஆய்வாளர் திரு.U.ஜெயவேல் அவர்கள் அலுவலகம் ஆஜராகி ஒரு டைப் செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அதன் விபரம் வருமாறு. அனுப்புனர் திரு.U. ஜெயவேல், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர். காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ந.க.எண். 704/2020/ஜ1 நாள்.16.12.2020 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை – டாஸ்மாக் கடை எண் 4000 (F-11), திருப்பூர் - புகார் மனு வழங்குதல் - தொடர்பாக. நேற்று 15.12.2020-ம் தேதி மாலை திருப்பூர் மாவட்டம் திருப்பூர் வளர்மதி பஸ்நிலையம் அருகே உள்ள பிக் பஜார் காம்ப்ளக்சில் கீழ் தளத்தில் இயங்கி வரும் டாஸ்மாக் கடை எண் 4000 (F-11) இல் மதுபானங்களை வாங்க வரும் வாடிக்கையாளர்களிடம் அவர்கள் வாங்க வரும் மதுபானங்களுக்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்து கூடுதல் தொகையை டாஸ்மாக் கடையில் பணிபுரியும் ஊழியர்கள் எடுத்துக்கொள்வதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் நானும் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி கடையை 15.12.2020 ம் தேதி இரவு சுமார் 20.45 மணி முதல் 16.12.2020 ம்தேதி அதிகாலை சுமார் 02.00 மணிவரை திடீர் தணிக்கை செய்தும், இந்த திடீர்தணிக்கையின்போது மேற்படி கடைக்கு வந்திருந்த செல்லம் நகரில் இயங்கிவரும் டாஸ்மாக் கடை எண் 1965ன் மேற்பார்வையாளர் திரு.M.லாசர், இடுவாயில் இயங்கி வரும் டாஸ்மாக் கடை எண் 2300ன் மேற்பார்வையாளர் திரு.S.R மாணிக்கம் மற்றும் வீரபாண்டியில் இயங்கி வரும் டாஸ்மாக் கடை எண் 2302ன் உதவி விற்பனையாளர் திரு. R.கோவிந்தன் ஆகியோர்களிடமிருந்தும் மேற்படி கடையின் மேசையின் அருகே வலது புறம் இருந்த மதுபானங்களின் செல்பில் இருந்த பணம் ஆக கணக்கில் வராத மொத்த பணம் ரூ.50,520/-ம் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது விற்பனையாளர் திரு.D.பெரியசாமி அவர்கள் 15.12.2020 ம்தேதிக்குரிய Rough Stock Register - யை எடுத்து ஆஜர்செய்ததை மாவட்ட மேலாளர் திரு.S.சௌந்தரபாண்டியன் அவரிடம் கையொப்பம் பெற்று கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி கடை ஊழியர்களின் வருகைப்பதிவேட்டினை விற்பனையாளர் திரு. D.பெரியசாமி எடுத்து ஆஜர்செய்ததை விசாரணையின்பொருட்டு கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது தயார்

செய்யப்பட்ட நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ. 50,520/- மற்றும் மேற்படி பதிவேடுகள் ஆகியவைகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் XXXX U.ஜெயவேல் 16.12.2020 ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை மாவட்டம். ·இணைப்பு: மேற்கண்டுள்ளவாறு. Sir, received the complaint with enclosures on 16.12.2020 at 12.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.9/2020/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 ஒப்பம் xxxx R.கௌசல்யா16/12/2020 Inspector of Police, V&AC, Tiruppur. திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னிலை: திரு.1) U.ஜெயவேல் 16.12.2020 ஆய்வுக்குழு ஆய்வாளர், ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை மாவட்டம் 2) திரு. R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். இன்று 15.12.2020 ஆம் தேதி மாலை திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வளர்மதி பஸ்நிலையம் அருகே உள்ள பிக் பஜார் காம்ப்ளக்ஸில் கீழ் தளத்தில் இயங்கிவரும் டாஸ்மாக் கடை எண். 4000 (F-11) இல் மதுபானங்களை வாங்க வரும் வாடிக்கையாளர்களிடம் அவர்கள் வாங்கும் மதுபானங்களுக்கு அரசு நிர்ணயிக்கபட்ட விலையை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்து கூடுதல் தொகையை மேற்படி டாஸ்மாக் கடையில் பணிபுரியும் ஊழியர்கள் எடுத்துக்கொள்வதாக கிடைக்கபெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் பணிபுரியும் ஆய்வாளர் திரு.U.ஜெயவேல் ஆகிய நான், திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. R.கௌசல்யா மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி அலுவலகத்தை இன்று 15.12.2020 ஆம் தேதி மாலை 20.45 மணிக்கு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கையின் விவரம் பின்வருமாறு:- திடீர் தணிக்கை சகிதம் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வளர்மதி பஸ்நிலையம் அருகே உள்ள பிக் பஜார் காம்ப்ளக்ஸில் கீழ் தளத்தில் இயங்கிவரும் டாஸ்மாக் கடை எண்.4000 (F-11) -க்குள் மாலை சுமார் 20.45 மணிக்கு நுழைந்தபோது கடையில் பணியில் இருந்த விற்பனையாளர்கள் திரு.N.K.தர்மன், த/பெ. கிருஷ்ணன் மற்றும் திரு. D.பெரியசாமி, த/பெ. துரை ஆகியோர் மதுபானங்களை விற்பனை செய்துகொண்டிருந்தனர். மேற்படி நபர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு திரு. N.K.தர்மன் அவர்களை விசாரிக்க, தான் கடந்த ஒரு வருடமாக மேற்படி கடையில் விற்பனையளராக பணிபுரிந்து வருவதாக கூறினார். பின்பு அவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே முன்வந்து தனது சட்டையின் இடது புற மேல் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ. 430/- எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ. 430/- அவரிடமே திருப்பி

ஒப்படைக்கப்பட்டது பின்பு பெரியசாமி என்பவரை விசாரிக்க தான் மேற்படி கடையின் விற்பனையாளராக கடந்த இரண்டு வருடமாக பணிபுரிந்து வருவதாக கூறினார் மேற்படி கடையின் மேற்பார்வையாளர் பற்றி விசாரிக்க திரு. தர்மன் என்பவர் மேற்படி கடையின் மேற்பார்வையாளர் திரு. N. தமிழ்மணி என்றும் அவர் வெளியே சென்றுவிட்டதாகவும் கூறினார் திரு.தர்மன் அவர்களிடம் மாவட்ட மேலாளர் -டாஸ்மாக் அவர்கள் குறித்து விசாரிக்க மாவட்ட மேலாளர் திரு. சௌந்தரபாண்டியன் என்றும் கூறினார். திரு S.சௌந்தரபாண்டியன் அவர்களை தொடர்பு கொண்டு மேற்படி கடைக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டது. பிறகு மேற்படி கடைக்குள் இருந்த தனி நபர்கள் திரு.M.கேசவமூர்த்தி, த/பெ முத்துசாமி, 38 பாவடி வீதி, காமாட்சியம்மன் கோயில் பின்புறம், இடுவம்பளையம், திருப்பூர் மற்றும் திரு.V.துரைராஜ், த/பெ வேணுகோபால், கதவு எண் 3, குழந்தைசாமி கம்பவுண்டு, பாரப்பாளையம் பெட்ரோல் பங்க் பின்புறம், திருப்பூர் ஆகியோர் இருந்தனர் மேற்படி தனிநபரான திரு. M.கேசவமூர்த்தி என்பவரை விசாரிக்க அவர் தன்னிடம் வேலை செய்யும் மேற்படி திரு. துரைராஜ் என்பவருடன் மதுபானம் வாங்க வந்திருப்பதாக கூறினார். மேற்படி திரு. M.கேசவமூர்த்தி என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே முன்வந்து தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.22,580/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பண்ம் குறித்து விசாரிக்க தான் திருப்பூர் தாராபுரம் ரோட்டில், புதூர் பிரிவில் மீன்கடை வைத்துள்ளதாகவும், மேற்படி பணம் இன்று மீன் விற்ற வகையில் வந்த தனது சொந்த பணம் என்று கூறி ஆஜர் செய்த மேற்படி பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது அதன் பின்னர் திரு.V.துரைராஜ் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே முன்வந்து தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ. 400/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அது தனது சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கபட்டது. சுமார் 21.30 மணியளவில் மேற்படி கடைக்குள் செல்லம் நகரில் இயங்கி வரும் டாஸ்மாக் கடை எண். 1965 இன் மேற்பார்வையாளர் திரு. M. லாசர் மற்றும் இடுவாயில் இயங்கிவரும் டாஸ்மாக் கடை எண் 2300 இன் மேற்பார்வையாளர் திரு.S.R.மாணிக்கம் ஆகியோர் நுழைந்தனர் மேற்படி மேற்பார்வையாளர்களை விசாரிக்க அவர் கடை எண் 4000 த்தின் மேற்பார்வையாளர் திரு. N. தமிழ்மணி அவர்கள் தனது மகனுக்கு உடல்நிலை சரியில்லாததால் ஊருக்கு செல்வதாகவும், அதனால் தனது கடைக்கு சென்று கடையை பார்த்துக்கொள்ளும்படி கூறியதால் தாங்கள் இருவரும் வந்ததாக கூறினர் திரு.M.லாசர் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே முன்வந்து தனது இடதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ. 10,400/-ஐ எடுத்து ஆஜர் செய்தார்.

மேற்படி பணம் குறித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக கூறியதால் சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ. 10,400/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு திரு. S.R. மாணிக்கம் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானகவே முன்வந்து தனது இடதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.10,420/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக கூறியதால் சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ. 10,420/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதுசமயம், திருப்பூர் மாவட்ட டாஸ்மாக் மேலாளர் திரு. S.சௌந்தரபாண்டியன் என்பவர் சுமார் 22.25 மணிக்கு ஆஜர் ஆனார். அவரிடம் எங்களை அறிமுகம் செய்துகொண்டு நடவடிக்கைக்கு உதவியாக இருக்கும்படி கோரியதன் பேரில் அவர் சம்மதம் தெரிவித்தார். மேற்படி கடையின் விற்பனை பகுதியில் தெற்கு பார்த்திருந்த மேஜையின் வலதுபுற டிராயரை தணிக்கை செய்ய அதில் பணம் ரூ. 3,66,030/- இருந்தது. இதுகுறித்து விற்பனையாளர் திரு. தர்மன் அவர்களிடம் கேட்க மேற்படி பணம் இன்றைய தேதியில் மது பானங்கள் விற்கப்பட்ட வகையில் வரபெற்ற பணம் என்று கூறினார். இதுகுறித்து சம்பந்தப்பட்ட பதிவேட்டினை கேட்க விற்பனையாளர் திரு. D.பெரியசாமி மேற்படி கடையின் STOCK REGISTER ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட மதுபான வகை வாரியாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இன்றைய நாளின் தொடக்க இருப்பு மற்றும் முடிவு இருப்பு குறித்து கேட்க திரு. பெரியசாமி தான் பரமாரிக்கும் ROUGH STOCK REGISTER ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதில் இன்றைய மதுபானங்கள் மொத்த விற்பனை . தொகை ரூ.3,67,020/- என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தணிக்கையின்போது விற்பனைத்தொகை ரூ.3,66,030/- என இருந்தது. இதன் ரொக்க குறைவு ரூ.990/- குறித்து விசாரிக்க மதுபானம் வாங்க வரும் வாடிக்கையாளர்களுக்கு கேட் பாசிற்காக பெறப்பட்ட இழப்பு தொகை என கூறினார். மேற்படி 15.12.2020 ஆம் தேதிக்குரிய ROUGH STOCK REGISTER ஐ டாஸ்மாக் மாவட்ட மேலாளர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களிடம் கையொப்பம் பெற்று விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. பிறகு மேற்படி மேஜையின் அருகே வலதுபுறம் இருந்த மதுபாட்டில்களின் செல்பில் பணம் ரூ.1,600/- இருந்தது. இது குறித்து விசாரிக்க யாரும் உரிமை கோராதததால் சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.1600/- விசாரணைக்காக கைபற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது சுமார் 23.50 மணி அளவில் திருப்பூர் வீரபாண்டி டாஸ்மாக் கடை எண்.2302 இன் உதவி விற்பனையாளர் திரு. R.கோவிந்தன் என்பவர் கடைக்குள் நுழைந்தார். அவரை விசாரிக்க அவர் தானாகவே முன்வந்து தான் வைத்திருந்த பேக்கில் இருந்து பணம் ரூ. 28,100/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக பதிலளித்தாதல் சந்தேகத்தின்

அடிப்படையில் மேற்படி பணம் ரூ. 28,100/- ஐ விசாரணைக்காக கைபற்றப்பட்டது. மேற்படி கடை ஊழியர்களின் வருகை பதிவேடு பற்றி கேட்க விற்பனையாளர் திரு. D.பெரியசாமி எடுத்து ஆஜர் செய்ததை விசாரணையின் பொருட்டு கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது கணக்கில் வராத மற்றும் சந்தேகத்தின் அடிப்படையில் கைபற்றப்பட்ட மொத்த பணம் ரூ. 50,520/- விசாரணையின்பொருட்டு கைப்பற்றபட்டது. இந்த திடீர் தணிக்கையானது 15.12.2020 ஆம் தேதி இரவு சுமார் 20.45 மணிக்கு துவங்கி 16.12.2020 ஆம் தேதி சுமார் 02.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது அரசு ஊழியர்களையும் மற்ற நபர்களையும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டனர். மதுபான விற்பனைக்கு எவ்வித இடையூறும் இன்றி இந்த திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையானது மடிக்கணினியில் தலைமை காவலர் 1799, திரு. அசோகன் என்பவரால் தட்டச்சு செய்யபட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கை கீழ்கண்ட நபர்களால் கையெழுத்து செய்யப்பட்டது. ஒப்பம் xxxx U.ஜெயவேல் ஆய்வுக்குழு ஆய்வாளர், கோவை, S. சௌந்தரபாண்டியன், மாவட்ட மேலாளர், டாஸ்மாக், திருப்பூர், D. பெரியசாமி, விற்பனையாளர், M. லாசர், மேற்பார்வையாளர், டாஸ்மாக், திருப்பூர், S.R.மாணிக்கம், மேற்பார்வையாளர், திருப்பூர், R.கோவிந்தன், உதவி விற்பனையாளர், கடைஎண் 2302, N.K. தர்மன், விற்பனையாளர், டாஸ்மாக், A.அசோகன், HC-1799, V & AC, திருப்பூர் மற்றும் R.கௌசல்யா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். நான் மேற்கண்ட புகாரினையும் செயல் முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.50,520/-ஐயும், இன்று 16.12.2020-ம் தேதி 12.30 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.9/2020/AC/TPR U/s 102 Cr.P.C r/w 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 கீழ் 13.00 மணிமுதல் 14.00 மணி வரை வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், செயல் முறை நடவடிக்கை, மற்றும் பணம் ரூ.50,520/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

R. K... 16/12/2020
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு,
திருப்பூர்